பக்கங்கள் 4

விலை: ரூபா 2-00

University of Jaffna Sri Lanka
RECEIVED
1989-11-3
Periodicals Division
Library

இதழ்: 26 வெள்ளிக்கிழமை 3-11-1989

## ரயிலில் வெடிகுண்டு

## மட்டுநகரில் பீதி!

(மட்டக்களப்பு)

நேற்று காலை மட்டுநகரில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட புகையிரத வண்டியில் வெடிகுண்டு வைக்கப் பட்டதாக கிடைத்த அநாமதேய தொலைபேசித் தகவலையடுத்து, நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு கடுமையான சோதனையின் பின் புகையிரதம் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டது. இதில் பிரயாணம் செய்த மக்கள் பீதிக்குள்ளாகி மிகவும் சிரமப் பட்டனர். பல மணித்தியாலங்கள் தாமதமாகி புகையிரதம் கொழும்பை நோக்கிச் சென்றதாகத் தகவல்கள் தெரிவித்தன.

# நிவாரண பணிகளில் மோசடி

# கண்காணிப்பதற்கு விசேட குழு

வடக்கு கிழக்கு மாகாண அரசு ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் புனர் வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகள் உண்மையிலேயே பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைகின்றனவா என்பதைக் கண்காணிக்கவும், மேற்பார்வையிடவும் அதிகாரம் வாய்ந்த குழுக்களை, மாகாணசபை உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாக நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மாகாண அரசு வட்டாரங்களிலிருந்துவரும் நம்பகமான செய்திகள் தெரிவிக்கின்றன.

பல்வேறு மாவட்ட மக்களும் தமக்கு சரியானவகையில் நிவாரண நிதிகள் வழங்கப்படவில்லை என்றும், கிராம சேவையாளர்கள் தம் மனம் போனபோக்கில் இவற்றுக்கான சிபார்சுகளை செய்துள்ளனர் எனவும் அரச உயர் அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் ஆதாரபூர்வமாக செய்துகொண்ட புகார்களை அடுத்தே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ள விருப்பதாக அறிய முடிகின்றது.

ஒரே வீட்டில் இரண்டு, மூன்றுபேர்களுக்குக்கூட மீளக் குடியமர்வதற்கான கொடுப்பனவுகளைப் பெற்றுள்ளதாகவும், தொழில் பாதிப்புற்றவர்கள் தொழில்களை மீள ஆரம்பிப்பதற்காக வழங்கப்படும் 4000-00 ரூபா கொடுப்பனவுகளிலும் பெரும் ஊழல்களும், மோசடிகளும் மறைந்திருப்பதாக பல தரப்பிலிருந்தும் குற்றச் சாட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன.

தென்மராட்சிப் பகுதியில் வீட்டின் ஓட்டைக் கழற்றி விட்டு, ஷெல் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டதாக படம் எடுத்து பொலீசிலும் புகார் செய்து பெருந் தொகைப் பணத்தை நஸ்ட ஈடாக பெற்றுக் கொண்ட பலரது 'பொட்டுக் கேடுகள்' அம்பலத்துக்கு வந்துள்ளதாகவும், சுயதொழில் முயற்சிகள் எதுவும் மேற் கொள்ளாத பலருக்கு கோழிப் பண்ணை, மாட்டுப்பண்ணை ஆட்டுப்பண்ணை என பல பண்ணைகளை'' உருவாக்கியதின் மூலம் பல ஆயிரங்களை பலர் ஏப்பம்விட்டுள்ளதாகவும் பொதுமக்கள் புகாரிட்டுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## 7000 பேர் தேர்தலில் போட்டி

(டில்லி)

இந்தியப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட இது வரை 7000 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

தமிழ் நாட்டில் 700 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

வேட்பு மனுத் தாக்கல் செய்வது அசாம் மாநிலம் உட்பட வேறு சில இடங்களில் இன்னமும் முடிவடையவில்லை.

## "உங்களை பாதுகாக்க உங்கள் புதல்வர்கள் வருகிறோம்"

## வடக்கு கிழக்கு மக்கள் பாதுகாப்பு படை

## நகர வீதிகளில் அணிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் தங்கள் கடமையைப் பொறுப் பேற்க வெளியேறிய வடக்கு கிழக்கு மக்கள் பாதுகாப்புப் படைக்கு நகர வீதியெங்கும் மக்கள் உற்சாக வரவேற்பளித்தார்கள். வீதிகளில் திரண்டிருந்த தொழிலாளர்களும், வர்த்தகர்களும் பொது மக்களும் மாலையும் கையுமாகநீண்டநேரம் ஆங்காங்கே காத்திருந்து மாலை அணிவித்து தமிழ்ப்படை வீரர்களைக் கௌரவித்தார்கள். சில இடங்களில் நிறுத்தி சோடா குளிர்பானங்களும் வழங்கினார்கள்.

''உங்கள் புதல்வர்கள் வருகிறோம்!'' என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரங்களையும் வீரர்கள் மக்களுக்கு விநியோகித்தவண்ணம் சென்றனர். ''தமிழ் மக்கள் அடைந்த அவலங்களுக்கு முடிவு காண, மக்களுக்கு அமைதியையும் நிம்மதியையும் கொண்டுவர, சிறீலங்கா இராணுவமும் தமிழ் மண்ணை ஆக்கிரமிக்காது தடுக்க, உங்கள் கரங்களைப் பலப்படுத்த உங்கள் புதல்வர்கள் இதோ வருகிறோம்!'' என்றும் அத்துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட் டிருந்ததாக எமது நிருபர் தெரிவிக்கிறார்.

இவ் வரவேற்பில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. பிரேமச் சந்திரன், யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. சு. ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். அரசியல் இணைப்பாளர் அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் மத்தியில் உரையாற்றும் போது, 'மக்கள் பாதுகாப்புப் படையினர் மக்களுடன் ஒன்றுபட்டு மக்களுக்கு நிம்மதியையும் மகிழ்ச்சியையும்

(4ம் பக்கம் பார்க்க)

## அமைதிப்படை அடுத்தகட்டமாக மட்டுநகரில் இருந்து விலகும்

இந்திய அமைதிப் படையினர் அம்பாறை மாவட்டத்திலிருந்து வெளியேறியமையைத் தொடர்ந்து, அடுத்த கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வெளியேறவுள்ளனர். இதனைத் தொடர்ந்து மாகாணத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக இந்திய அமைதிப்படை அதிகாரிகளும், இயக்கங்களின் முக்கிய ஸ்தர்களும் பரிசீலனைகளை மேற் கொண்டு வருகின்றனர். ஆனாலும் வெளியேறுவதற்கான திகதி இன்னமும் தீர் மாணிக்கப்படவில்லை. இவ்வாறு இந்திய அமைதிப் படையினரின் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

அம்பாறையில் மாகாண அரசு சட்டம், ஒழுங்கையும், மாவட்டத்தின் பாதுகாப்பையும் வினைத்திறனுக பராமரிக்க கூடியது என்பதை நிரூபித்துள்ளது.

## யாழ்தேவி தாமதம்

(காங்கேசன்துறை)

காங்கேசன் துறையருகே சரக்கு ரயில் வண்டி தடம் புரண்டதால் யாழ்தேவி ரயில் தாமதமாக நேற்று கொழும் புக்குப் புறப்பட்டது.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு வந்த சரக்கு வண்டி காங்கேசன் துறை ரயில் நிலையத்தருகே தடம் புரண்டுவிட்டதால் காங்கேசன்துறையில் இருந்து நேற்றுக்காலை 6-30 மணிக்குப் புறப்பட வேண்டிய யாழ் தேவி ரயில் உரிய நேரத்துக் குப் புறப்பட முடியாமல் போய்விட்டது. திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்ட பின்பே யாழ்தேவி கொழும் புக்குச் சென்றது.

## பணம் கொடுத்தால்தான் பிணம் எடுக்கமுடியும்!

(யாழ்ப்பாணம்)

யாழ் அரசினர் போதனா வைத்தியசாலையில் இறந்தவர்களது பிரேத பரிசோதனைகள் நடைபெறும் சமயங்களில், இங்கு கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு 250 ரூபா 'தானமாக' வழங்கவேண்டுமாம்.

இறந்தவர்களின் பிரேத பரிசோதனைகள் நடைபெறும் சமயங்களில் அங்கு கடமையி லீடுபடும் சிற்றூளியர்கள்

(4ம் பக்கம் பார்க்க)

## புனர்நிர்மாணக் குழு அமைக்க

## கோட்டச் செயலாளர் நடவடிக்கை

வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் பிரிவுப் புனர் நிர்மாணப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன. இக் குழுக்களில் அம்மாவட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும், மாகாணசபை உறுப்பினர்களும், பிரதேச சபைத் தலைவர், அதன் அங்கத்தவர்கள், கிராமசேவகர் முதலானோர் இடம்பெறவுள்ளனர்.

இத்தகைய குழுக்களை உடனடியாக ஆரம்பிக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர் சகல உதவி அரசாங்க அதிபர்களையும் பணித்துள்ளார்.

இப்பணிப்புரையைத் தொடர்ந்து உடுவில் உதவி அரசாங்க அதிபரும் கோட்

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைவாசி உயர்வுக்கெதிராக போராட அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

''விலைவாசிகள் வேகமாக ஏறுவதையும், அதனல் ஏற்படும் பயங்கர விளைவுகளையும் பற்றி ஐக்கிய சோஸலிச முன்னணி மீண்டும் மக்களின் விசனத்தை வெளிப்படுத்திக் கொள்கின்றது. அச்சம் நிலை கொண்டுள்ளதன் காரணமாக செய்வதறியாது தத்தளிக்கும் மக்கள் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கிடுகிடுவென ஏறுவதைக் கண்டு நிலைகுலைந்துள்ளனர்''

இவ்வாறு ஐக்கிய சோஸலிச முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அவ் அறிக்கையில் மேலும் கூறுவதாவது.

செப்டெம்பர் மாத வாழ்க்கைச் செலவுப் புள்ளி 851.5 ஆகும். அரிசி, பாஸ்மா, சீனி, மா, பாண், மருந்துவகை ஆகிய அனைத்தினதும் விலைகள் மேலும் உயருகின்றன. பெற்ரோல் விலை நூற்றுக்கு 25 சதவீதமாக உயர்த்தப்பட்டது. இது மக்களைப் படுமோசமாகப் பாதிக்கிறது, பிரயாணிகளின் பயணச் செலவுகள் அதிகரிப்பது மாத்திரமல்ல, போக்குவரத்துக் கட்டண உயர்வுடன் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் மீண்டும் உயரவுள்ளன.

பெரிய பற்ருக்குறையுடன் நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் அரசு சர்வதேசிய நாணய நிதியத்திடம் உதவி கேட்டது. எட்டுக்கோடி ஐம்பது லட்சம் டாலர் கடனைப்பெற மாதக் கணக்கில் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தவேண்டி ஏற்பட்டது. தற்போது சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே கேட்ட கடன் டிசம்பர் மாதத்தில் கிடைக்கவுள்ளது.

இதற்கு அளித்த வாக்குறுதிகள்தான் என்ன? அதுபற்றி இதுவரை எதுவும் கூறப்படவில்லை. எதிர்காலத்திலும் மௌனம் சாதிக்கப்படவுள்ளது. இவ்வாண்டின் வரவு செலவின் பற்ருக்குறை வெகுவாகக் குறையும் என்றும் அடுத்த ஆண்டு அதைவிடக் குறையும் என்றும் கூறப்படுகிறது. இதிலிருந்து எதிர்காலத்தில் இன்னும் விலைவாசிகள் உயருமென்பதே தெளிவாகிறது மானியங்கள் வெட்டப்படவுள்ளன, அல்லது நிறுத்தப்படவுள்ளன. மானிய விலைக்குப் பசளை வழங்குதல் சந்தேகமின்றி துண்டிக்கப்படவுள்ளது. டிசம்பர் அளவில் பாணின் விலை ருத்தல் 6 ரூபாவாக உயரவுள்ளது.

சமாதானத்தையும், வழக்க நிலையையும் நிலைநாட்ட உண்மையாக ஆர்வங்கொண்டுள்ள அனைத்து மக்களினதும் வாழ்க்கை நிலைகளைப் பாதுகாக்கும் போராட்டத்தில் அணிதிரள வேண்டும்.

ஐக்கிய சோஷலிச முன்னணி

## யாழ். ரயிலில் மாணவர் தொகை அதிகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் வழமைபோல நடைபெறுவதால் இப் பாடசாலைகளில் கல்வியைத் தொடர கொழும்பு, பிற தென்பகுதிகளிலிருந்து ஏராளமான மாணவர்கள் தினமும் ரயில் மூலம் தமது இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ரயிலில் வருபவர்களைப் பிடிக்கிறார்கள் என்ற பிரச்சாரத்தை சிலர் மேற்கொண்டிருந்தபோதிலும் அது 'பச்சைப் பொய்' என்று தெரிந்தும் மாணவர்கள் தினமும் ரயில் பஸ் மூலமாக யாழ்ப்பாணத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்

அடுத்த ஆண்டு ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புகளில் இடம் பிடிப்பதற்கு தற்போது பெரும் போட்டி ஏற்பட்டுள்ளதாகப் பாடசாலை அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வகுப்புகளில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் தற்போது பாடசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றனவாம்.

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை எடுக்கின்ற மாணவர்களுக்கு சில பாடசாலைகளில் மேலதிகமாக வகுப்புகள் நடாத்தப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்ப் பிரதேசங்களில் குறுகியகாலப் பயிர்

(யாழ்ப்பாணம்)

அரிசியின் விலை திடீரென அதிகரித்துள்ளதால் தமிழ் பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் குறுகிய காலத்தில் பயன் தரும் நெல்ரகங்களையே இம்முறை (காலபோகத்தில்) விதைத்துள்ளனர் என விவசாயத் திணைக்களம் தெரிவிக்கிறது.

மூன்று, நான்கு மாதங்களில் அறுவடை செய்யக்கூடிய நெல் ரகங்களை விவசாயிகள் விரும்பி விதைத்துள்ளதால் அரிசியின் விலை விரைவில் குறைந்துவிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மழைபெய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தினலும் குறைந்தகால நெல்ரகங்களை விவசாயிகள் தேர்ந்தெடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை இதுவரை பெய்த மழை பயிர் வளர்வதற்கு ஓரளவு போதுமானதாய் இருக்கிறதாம்.

ஏனைய தமிழ்ப் பிரதேசங்களில் மழை போதுமானதாக இல்லை என்றே பொதுவாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தந்தி இலாகாவில் ஆற்றலுள்ள கணக்காளர்கள் இல்லை

(கொழும்பு)

1981-ம் ஆண்டிலிருந்து 1984-ம் ஆண்டுவரையான நான்கு வருடங்களுக்கு தன் திணைக்களத்தின் கணக்குகளைப் பரிசோதிப்பதற்கு தந்தித் தொலை தொடர்பு இலாகா 7 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா செலுத்தி தனியார் நிறுவன மொன்றின் சேவையைப் பெற்றதாக கணக்காய்வாளர் நாயகம் கூறுகிருர்.

தமது இலாகாவில் ஆற்றல் உள்ள கணக்காளர்கள் இல்லாத காரணத்தினலேயே தனியார் நிறுவனத்தின் சேவையைப் பெறவேண்டி ஏற்பட்டதாக இவ் இலாகா தெரிவித்துள்ளது என கணக்காளர் நாயகம் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்,

1983-ம் ஆண்டில் நிலையத்தில் நிறுவப்பட்ட கம்பியூட்டர் இயந்திரங்களைப் பயன்படுத்தாமல் வெளியிலேயே இவ்வேலைகளைச் செய்ததால் ஏற்பட்ட நட்டமும் பெரிய அளவில் உள்ளதாக அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## தெல்லிப்பழை வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் முதலமைச்சருக்கு மகஜர்

(தெல்லிப்பழை)

''கனடிய அரசிடமிருந்து பெற்ற கோபால் யூனிற் இயந்திரத்தை வைத்தியசாலைக்குக் கொண்டுவந்து சேர்க்க நடவடிக்கை எடுப்பதுடன் ஒரு புற்றுநோய் சிகிச்சை நிபுணரையும் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.'' இவ்வாறு தெல்லிப்பழை வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு அனுப்பிய மகஜரில் குறிப்பிட்டுள்ளது. இம் மகஜரில் மேலும்;

''இவ் வைத்தியசாலையின் ஒரு பகுதியில் பல லட்சரூபா செலவில் கட்டப்பட்டு உபயோகிக்கப்படாமல் இருக்கின்றது. ஆகவே கட்டிடவசதிகள் போதுமானளவில் இருப்பதால், புற்றுநோயாளர் சிகிச்சை நிலையத்தை தாமதமின்றி இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும எனக்'' கூறுகின்றது.

## நவீல்ட் பாடசாலையில் கல்விக் கண்காட்சி

(சாவகச்சேரி)

கைதடியில் உள்ள விழிப்புலன், செவிப்புலன் இழந்தோர் நவீல்ட் பாடசாலையில் கல்வி, கைப்பணிக் கண்காட்சி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நவீல்ட் பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையைச் சித்தரித்தும், இம்மாணவர்களின் கைப்பணித் திறனை வெளிக்காட்டியும் இக் கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நேற்று 2ந் திகதி மேற்படி பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமான இக் கண்காட்சியை ஏராளமானவர்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

இன்றும், நாளை 4-ந் திகதியும் இக்கண்காட்சி நடைபெறும். பிரவேசம் இலவசம். காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை கண்காட்சியைக் கண்டு களிக்கலாம்.

## ஸ்கந்தசஷ்டி விரதம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் பிரதேசங்களில் ஸ்கந்தசஷ்டி விரதம் தற்போது அனுஷ்டிக்கப்படுகிறது தினமும் கோவில்களில் ஏராளமான பக்தர்கள் கூடி தமது விரத அனுஷ்டிப்பில் ஈடுபடுவதைக் காணமுடிகிறது.

மரக்கறி விலைகள் மிகவும் கூடியுள்ளது. மரக்கறி வகைகள் மட்டுமல்ல. மீன் வகைகளும் அதிக விலைக்கே விற்கப்படுகின்றன.

பொருட்களின் விலை அதிகரிப்பால் கறிவகைகளின் விலையும் விசம்போல ஏறியுள்ளன,

## புதிய ஊழியர்களை நியமிப்பதில் கட்டுப்பாடுகள்

(திருமலை நிருபர்)

வடக்கு கிழக்கில் உள்ள மாநகரசபைகள் நகரசபைகள் பிரதேச சபைகள் ஆகியவற்றில் புதிய ஆளணிகளை (Cadre) உருவாக்குவதற்கும் அமைய ஊழியர்களின் நியமனங்களுக்கும் மாகாண உள்துறை அமைச்சு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. புதிய ஊழியர்கள் நியமிக்கப்படும் போது உள்ளூராட்சி ஆணையாளரினதும் உள்ளூராட்சி பணிப்பாளரினதும் எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என மாகாண உள்துறை அமைச்சின் பதில் செயலாளர் திரு என் பத்மநாதன் தெரிவித்தார்,

## 10 ஆயிரம் பிறப்புகளுக்கு ஆறு மரணங்கள்!

(கொழும்பு)

இலங்கையில் ஒவ்வொரு 10 ஆயிரம் மகப்பேற்றிலும் 6 தாய்மார்களின் மரணம் சம்பவிக்கின்றன என்று சுகாதார கல்விப் பணிப்பகத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் பிரசவத்தின் போது இறக்கும் தாய்மார்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகத் திட்டம் ஒன்று தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இரண்டாயிரமாம் ஆண்டளவில் இம் மரண வீதத்தைப் பாதியாகக் குறைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராமப்புறங்களிலுள்ள தாய் சேய் நல மருத்துவ மனைகளின் சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் மகப்பேற்று சிறுவர் பராமரிப்பு பிரிவின் பணிப்பாளர் டொக்டர் டி. வி. சில்வா தெரிவித்தார்.

1980 களின் பிற்பகுதியில் இந்த மரண வீதம் 6 ஆகக் குறைந்துள்ளது.

ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் தாய்மார்களின் பிரசவகால இறப்பு வீதம் மிகவும் குறைவானதாகும். எனினும் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளில் [illegible] மரணங்களிலும் பார்க்க இது கூடுதலாகும்.

## ஐம்பதினயிரம் விவசாயிகள் கடன் பெறுகிறர்கள்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள 16 இலட்சம் விவசாயிகளில் 50 ஆயிரத்துக்கும் குறைவான விவசாயிகளே இப்பொழுது கடன் வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து கடன் வசதிகளைப் [illegible] மொத்த தொழிலாளர் தொகையில் அரைப்பங்கினர் விவசாயத் தொழிலாளர்களாகும். இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்திப் பொருள்களில் 24 சத வீதமான பொருள்கள் இவ் விவசாயிகளினல் உற்பத்தி செய்யப்படுகின்றன என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தியாவுக்கு புதிய தூதுவர்

(வாஷிங்டன்)

இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவராக திரு. வில்லியம் கிளார்க் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரின் நியமனத்தை அமெரிக்க செனட்சபை உறுதிப்படுத்தியுள்ளது.

எதிர்காலத்தில் அமெரிக்க முதலீடு பெருமளவில் இந்தியாவில் செய்யப்படும் என புதிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

இம்மாத நடுப்பகுதியில் இவர் இந்தியாவில் தமது பொறுப்பை ஏற்றுக்கொள்வார் எனத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலேதீவில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறும்

(மாலே)

**மாலே தீவிலிருந்து மீதமாகவுள்ள இந்தியப் படை வீரர்கள் அனைவரும் இன்று நாடு திரும்புகின்றனர்.**

**இன்றைய தினத்தை மாலேதீவு அரசாங்கம் வெற்றி நாளாக அனுசரிக்க முடிவு செய்துள்ளது. இந்தியப் படை வீரர்களை வழி அனுப்பி வைக்கும் வைபவம் மிக விமரிசையாக நடைபெறவுள்ளது.**

மாலேதீவு அரசைக் கவிழ்ப்பதற்காக சென்ற ஆண்டு கூலிப்படையின் உதவியோடு அரச எதிர்ப்புச் சக்திகளால் நடாத்தப்பட்ட திடீர் தாக்குதல், பாரத அரசின் உதவியோடு முறியடிக்கப்பட்டது. இந்நடவடிக்கையை குறிக்கும் வகையில் இந்த வெற்றிநாள் அனுசரிக்கப்படும்.

கையும் அரசுக்கு எதிராக நடாத்தப்பட்ட இத் திடீர் தாக்குதல் முயற்சியை முறியடிக்கும் விதமாக மாலே தீவுக்கு சுமார் 1200 இந்தியத் துருப்புகள் விரைந்து அனுப்பி வைக்கப்பட்டனர்.

சென்ற ஆண்டு நவம்பர் 4ம் திகதியிலிருந்து ஆரம்பமான துருப்புகளின் வெளியேற்றத்தில் இது கடைசிக் கட்ட வெளியேற்ற நடவடிக்கையாக அமையுமென வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சவூதி தூதர் சுட்டுக்கொலை

(பெய்ரூட்)

லெபனான் தலைநகரான பெய்ரூட்டில் துப்பாக்கி ஏந்தி வந்த சிலர் சவூதி அரேபியத் தூதரைச் சுட்டுக் கொன்றுள்ளார்கள். மேற்கு பெய்ரூட்டில் தனது வீட்டை விட்டு வெளியே வந்த தூதர்மீது காரில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் சுட்டார்கள்.

லெபனானில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் சவுதி அரேபிய தூதரகத்தை ஷியா பிரிவினர் தாக்கியதால், தூதரை சவூதி அரேபியா திரும்ப அழைத்திருந்தது.

## 'ஜெயலலிதா மீது வழக்கு ஏன்? சபையில் கருணாநிதி விளக்கம்

(சென்னை)

ஆந்திர மாநிலத்திலிருந்து அரிசி வாங்கியதில் எந்தவிதமான ஊழலும் இடம்பெறவில்லை என தமிழக அரசு தரப்பிலிருந்து திரும்பத் திரும்ப மறுத்தும், அதனை ஏற்றுக் கொள்ளாமல் குற்றச் சாட்டுக்களைக் கூறியதாலேயே எதிர்க்கட்சித் தலைவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்று தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எஸ். திருநாவுக்கரசின் உரையின் போதே முதலமைச்சர் குறுக்கிட்டு பதில் அளித்தார். குற்றச் சாட்டுகளுக்குரிய ஆதாரங்களை திருநாவுக்கரசு பெற்று வந்திருப்பாரேயானால், அதைப் பற்றிச் சிந்திக்க அரசு தயாராக இருக்கிறது என்றும் கருணாநிதி சொன்னார்.

தமக்கு வந்த தகவல்களின் அடிப்படையிலேயே ஜெயலலிதா இந்தக் குற்றச் சாட்டுகளைக் கூறியதாகச் சொன்ன திருநாவுக்கரசு, ஜெயலலிதாவுக்கு இந்த அரிசி வாங்கப்பட்டது தொடர்பாக வந்த தந்தியின் தகவல்களை முதல்வரிடம் அளிப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஆளுனர் ஆட்சியிலும், அ. இ. அ. தி. மு. க. ஆட்சியிலும் நெல் கொள்வனவு செய்வதற்கு என்னென்ன நடைமுறைகள் இருந்தனவோ அவையே இப்போதும் பின்பற்றப்பட்டன என்று முதலமைச்சர் கருணாநிதி குறிப்பிட்டார்.

## ரயில் கவிழ்ந்து 52 பேர் பலி

(டெல்லி)

புதுடெல்லியிலிருந்து கேரளா சென்றுகொண்டிருந்த ஆஃபோன் எக்ஸ்பிரஸ் ரயில் பாட்னா அருகே தடம் புரண்டதால் 52 பேர் உயிரிழந்தனர். 100 பேர் காயமடைந்தனர். காயமடைந்துள்ளவர்களில் 22 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்திற்கான காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லையாயினும், சிக்னல் காரணமாக, திடீரென்று 'பிரேக்' பிடித்ததால் ரயில் தடம் புரண்டிருக்கலாம் என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

மிகவும் மோசமாகப் பாதிப்படைந்த மூன்று பெட்டிகளை மீட்கும் பணி தொடர்ந்து வருகிறது. அப் பெட்டிகள் மின் கம்பங்களுடன் மோதியதால் மின்கம்பிகள் பெட்டிகளின் மீது அறுந்து விழுந்துள்ளன. இதனால் மாண்டவர்களின் எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

## ஒரே இரவில் 25 லட்சம் வசூல்

(வாஷிங்டன்)

புற்று நோய் தடுப்பு நிதிக்காக பிரபல இந்தி நடிகரான சுனில்தத் ஒரே இரவில் 25 லட்சம்ரூபாவை சேகரித்தார்.

அமெரிக்காவில் நடந்த ஒரு நிகழ்ச்சியிலேயே 25லட்சத்து 50 ஆயிரம் ரூபா வசூலானது. அத்துடன் லாஸ் ஏஞ்சல்ஸ், சான்பிரான் சிஸ்கோ ஆகிய நகரங்களிலும், கனடாவிலும் நடாத்திய நிகழ்ச்சிகளில் பல லட்சம் ரூபாய்கள் சேகரிக்கப்பட்டன.

கனடாவில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் 35 லட்சம் ரூபா மதிப்புள்ள கதிரியக்க இயந்திரமொன்றை அன்பளிப்புச் செய்தனர்.

## பிஜியிலிருந்து இந்தியத் தூதர் வெளியேற்றம்!

(டெல்லி)

பிஜி நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட்டதாகக் குற்றம் சாட்டி, இந்தியத் தூதரை வெளியேறுமாறு பிஜி அரசு உத்தரவு இட்டுள்ளது. பிஜியை விட்டு வெளியேறுவதற்கு இந்தியத் தூதருக்கு 3 நாட்கள் கால அவகாசமும் கொடுத்துள்ளது.

இதற்கு முன்னதாக, பிஜி உடனான தூதரக உறவை முறித்துக் கொள்ளப் போவதாகவும் தூதரைத் திரும்ப அழைத்துக் கொள்ளப் போவதாகவும் இந்தியா ஏற்கனவே அறிவித்திருந்தது. இந்தியாவின் அறிவிப்புக்கு மறுநாளே பிஜி இவ்வாறு உத்தரவிட்டுள்ளது. இந்தியர்களைப் பெரும்பான்மை உறுப்பினர்களாகக் கொண்ட அரசாங்கம் 1987-ம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டதிலிருந்து இந்திய பிஜி உறவு நலிவடைந்தது.

## தாதிமார் வேலைநிறுத்தமும் ஆர்ப்பாட்டமும்

(கொழும்பு)

அரசினர் ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் தாதிமார்கள் இவ்வாண்டுக்குரிய சீருடைகள் வழங்கப்படாமைக்கு ஆட்சேபனை தெரிவிக்குமுகமாக இவ்வார இறுதியில் தேசிய ரீதியான அடையாள வேலை நிறுத்த மொன்றை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

சுமார் ஒரு மணித்தியால அடையாள வேலை நிறுத்தத்தையும், ஆர்ப்பாட்டத்தினையும் ஐக்கிய தாதிகள் சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இச் சீருடைகளைத் தைப்பதற்கான கட்டணப் பணமாக ரூபா 200 வழமையாகத் தரப்பட்ட போதிலும், கடந்த மூன்று வருடங்களாக அப் பணமும் வழங்கப்படவில்லை எனவும் சங்கப் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டார்.

## நிலநடுக்கத்தில் 19 பேர் பலி

(அல்ஜீரியா)

அல்ஜிரியாவில் இரண்டு முறை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் குறைந்தது 19 பேர் இறந்துள்ளனர் என்றும் நூற்றுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் என்றும் அதிகார பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன,

## ஐ. நா. நிர்வாக சபை உறுப்பினராக கிருஷ்ணன்

(பாண்டிச்சேரி)

ஐக்கிய நாடுகள் சபையினர் முன்னாள் இந்தியத் தூதர் என். கிருஷ்ணன், ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனத்தின் நிர்வாக சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். பாரிஸில் நடைபெற்ற போட்டி ஒன்றில் மொத்தம் பதிவான 157 வாக்குகளில் கிருஷ்ணனுக்கு 141 வாக்குகள் கிடைத்தன. ஆசிய பசுபிக் குழாமில் இது அதிக பட்ச வாக்குகளாகும். திரு. கிருஷ்ணன் நிர்வாக சபையில் 4 ஆண்டுகள் பணியாற்றுவார். தற்போது இவர் பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தில் சர்வதேச ஆராய்ச்சிப் பள்ளியின் 'டீன்' ஆக உள்ளார்.

## பெருநாட்டு அரசுக்கு பெரும் நெருக்கடி

(லீமா)

லத்தீன் அமெரிக்க நாடான பெருவின் தலை நகர் லீமா இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது உள்நாட்டு சட்டம் ஒழுங்கு பராமரிப்பை பொலிசாருக்குப் பதிலாக அந்நாட்டு இராணுவம் மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இடதுசாரி கெரில்லா இயக்கத்தினரை ஆதரிக்கும் பெருமளவு மக்கள் திரண்டு தலைநகரில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இப் பேரணியை அடக்குவதற்குப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர், இருவர் காயமடைந்துள்ளதுடன் 140க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதைத் தொடர்ந்தே தலைநகரில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

## மாஸ்கோவில் நேரு நினைவு முத்திரை

(மொஸ்கோ)

சோவியத் யூனியன், இந்தியாவின் முதல் பிரதமரும், சிறந்த தலைவருமான ஜவகர்லால் நேருவின் பிறந்த தினத்தை முன்னிட்டு, அவரது ஞாபகமாக ஒரு முத்திரையை வெளியிட்டுள்ளது.

சோவியத் யூனியனிலுள்ள நட்புறவுச் சங்க மாளிகையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் சோவியத்துக்கான இந்தியத் தூதுவரும் கலந்து கொண்டார்.

## அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கு யுத்தநிறுத்தம் பயன்படுத்தப்படுவதை அனுமதிக்கமுடியாது -நிக்கரக்குவா

(மனகுவா)

நிக்கரகுவாவில் 'கொன்ரா' கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான ஆயுதக்களைவுப் போரில், கடந்த 19 மாத காலமாகக் கடைப்பிடித்த போர் நிறுத்த நடவடிக்கையை ரத்துச் செய்துள்ளதாக நிக்கரகுவா அறிவித்தது. எதிர்ப் புரட்சியாளர்களை அடக்கும் இராணுவ நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்பட்டுவிட்டதாக மனகுவாவில் வெளியிடப்பட்ட அரச அறிக்கையொன்று கூறுகிறது.

'கொன்ரா' கிளர்ச்சிக்காரர்களுக்கான உதவியை அமெரிக்க அரசு நிறுத்திக் கொண்டு, கிளர்ச்சிக்காரர்கள் விலக்கிக் கொள்ளப்பட்டால் நிக்கரகுவா [illegible] நிறுத்தத்தை மீண்டும் ஏற்படுத்தும் என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டியது.

நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்காக அரசு எடுத்துவரும் முயற்சிகளைக் குழப்பும் முகமாக, அமெரிக்கா பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதன்மூலம் போர் நிறுத்தத்தை [illegible] நிக்கரகுவா அரசு [illegible] துள்ளது.

## துருக்கி பிரதமர் ஜனாதிபதியானார்

(அங்காரா)

துருக்கிய பாராளுமன்றம், பிரதமர் துங்கோ கொசாலை ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளது. இவரது ஜனாதிபதி பதவிக்காலம் 7 ஆண்டுகளாகும். கொசாலின் ஆளும் கட்சியைச் சேர்ந்த 253 உறுப்பினர்களும் அவருக்கு ஆதரவாக வாக்களித்தார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்ற கூட்டத் தொடரைப் பகிஷ்கரித்தனர். தெரிவின் முடிவில் நன்றி தெரிவித்து உரையாற்றிய கொசால், 'ஜனாதிபதி ஒருவர் பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டது துருக்கியின் ஜனநாயகத்துக்கு கிடைத்துள்ள வெற்றியாகும்' என்றார்.

கொசால் பிரதமராகப் பதவி வகித்த ஆறு வருடங்களில் தாராள பொருளாதாரக் கொள்கையைத் தீவிரமாய்க் கடைப் பிடித்தார். ஐரோப்பிய சமூகத்தில் பிரவேசிக்கவும் அவர் விரும்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை

# ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா?

தமிழும் அரச கரும மொழி. இது சட்டமாக்கப்பட்டு பல மாதங்கள் கடந்துவிட்டன. இன்னமும் தனிச் சிங்களத்தில் கடிதங்கள், விண்ணப்பப் படிவங்கள், சுற்றறிக்கைகள், என்பன வந்துகொண்டே இருக்கின்றது. இதனைப் பொறுப்பானவர்களிடம் யாராவது கேட்டால் தமிழ் தட்டச்சு, தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் போதியளவு இல்லை எனக் கூறப்படுகின்றது.

அரச சேவைக்கு புதிதாக ஆட்களைச் சேர்க்கும்போது கூட, சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக இருந்த காலத்திய சட்டவிதிகளின் கீழ்தான் இன்னமும் சேர்க்கப்படுகின்றனர். அரசமைப்புச் சட்டத்திலுள்ள தமிழ்மொழி அமுலாக்கத்திற்கு தடையான சரத்துக்கள் இன்னமும் நீக்கப்படவில்லை. அரச சேவையிலுள்ள தமிழ்பேசும் ஊழியர்கள் இன்னமும் சிங்கள தேர்ச்சி பெறவேண்டும் என்ற விதி அப்படியே இருக்கின்றது. சிங்களத் தேர்ச்சி இல்லாவிட்டால் சம்பள உயர்வு, பதவி உயர்வு என்பன மறுக்கப்படலாம் இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன? இன்னமும் அரசில் உள்ளவர்கள் தமிழ் அரச மொழி என்பதை நடைமுறையில் கொண்டுவரவும், அதற்குத் தடையான விதிகளை மாற்றியமைக்கவும் எத்தகைய முயற்சிகளையும் மேற்கொள்ளத் தயாராகவில்லை என்பதைத் தான். இந்த மாற்றுந்தாய் மனப்பான்மை மாறுவது எப்போது?

1956-ல் தனிச்சிங்களச்சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை எவ்வித நஷ்டஈடோ அல்லது பாதிப்புக்கான நிவாரணங்களோ வழங்கப்படவில்லை. சிங்களம் அரசகரும மொழியானதால், தமிழ்பேசும் மக்களையும், தமிழ்பேசும் அரச ஊழியர்களையும் பாதித்தமையாலும், அது ஒரு மனித உரிமை மீறல், இனங்களுக்கிடையேயான பாரபட்ச நடவடிக்கை என்பதாலுமே தமிழும் அரசகரும மொழியாக்கப்பட்டது. ஆகவே பாதிக்கப்பட்டவர்களுக்குரிய நஷ்டஈடும், நிவாரணமும் வழங்கவேண்டியதும், தமிழ் அரசகரும மொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தடையாகவுள்ள சகல அம்சங்களும் உடன் அகற்றப்படவேண்டும் என்பதும் பிரதானமானவை. இல்லையேல், தமிழ் அரசகரும மொழி என்பது அர்த்தமுள்ளதாக மாட்டாது.

வடக்குக் கிழக்கு மாகாணத்துக்கப்பாலுள்ள தமிழ் பேசும் மக்களது பிறப்பு இறப்புத் திருமணப்பதிவு என்பன தமிழ்மொழியிலேயே பதியப்படுதல்வேண்டும். ஆகவே இதற்குரிய பத்திரங்களை தமிழில் பொதுமக்கள் பெற்றுக் கொள்வதற்கு அரசு வழிசெய்யவேண்டும்.

தமிழர் ஒருவர் போக்குவரத்து இராசாங்க அமைச்சராக இருந்தும் கூட. பஸ்களில் இருக்கக்கூடிய பெயர்ப் பலகைகளில் தமிழ் இன்னமும் இடம்பெற முடியவில்லை அதுமட்டுமல்லாமல் சலுசல, லக்சல போன்ற அரச நிறுவனங்கள் இன்னமும் தமிழ் பேசும் மக்களுக்கு புரியாத மொழியில் தான் பெயர்ப் பலகைகளை பதித்துள்ளன. சிங்களத் திணிப்பு என்பது அரசின் கொள்கையாகவே தொடர்ந்தும் இருந்துவருகின்றது.

தமிழ் சட்டத்தில் அல்லாது நடைமுறையில் எப்போது அரசகரும மொழியாகும் என்பதே இன்றுள்ள பிரதான கேள்வியாகும் அரசு ஒரு சட்டத்தை ஆக்கினுல் அதை நடைமுறைப்படுத்தும் கடமையும் அரசுக்கே உண்டு. ஆனுல் சட்டம் இருந்தும் நடைமுறைப்படுத்தாமல் தட்டிக்கழிக்கும் இன்றைய போக்கை யாரிடம் முறையிடுவது? வேலியே பயிரை மேய்ந்தால் அதற்கு பரிகாரம் காண்பது எப்படி? வேலியை அகற்றி பயிரைப் பாதுகாப்பதைத் தவிர தமிழ் பேசும் மக்களுக்கு வேறுவழி உண்டா?

தமிழ்பேசும் அரச ஊழியர்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதியை அகற்றி, சிங்களம் பேசும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் அதே உரிமைகள் தமக்கும் வழங்கப்பட வேண்டும் என பல வருடங்களாகக் கோரிவருகின்றுர்கள். தமிழ் தங்களால்தான் வளர்கிறது எனக் கருதும் தமிழ் ஆசிரியர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள், புலவர்கள் மற்றும் தமிழ் அபிமானிகள் என்போர் 'தமிழ் அரச கரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்து' என்று ஒரே குரலில் கேட்கவேண்டும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பதை அரசுக்கு உணர்த்த முன்வரவேண்டும்.

கடந்த அரைநூற்றுண்டுகளுக்கு மேலாக தமிழினம் நடாத்திய போராட்டத்தின் பெறுபேருகவே அரசகரும மொழியாக தமிழ் ஏற்றுக்கொள்ளப்பட்டது அதை நடைமுறைப்படுத்த சகல தரப்பினராலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சகல அரச ஊழியர்களும், தமிழ் பேசும் மக்களோடு இணைந்து ஐக்கியப்பட்ட ஒரு வெகுஜனப்போராட்டமாக முன்னெடுப்பதின் மூலமே, அரசகரும மொழிச் சட்டத்தை அமுலாக்க நிர்ப்பந்திக்க முடியும்.

## நிவாரண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கிழக்கு மாகாண அரசால் நியமிக்கப்படவுள்ள கண்காணிப்புக் குழுக்கள், இக் கொடுப்பனவுகள் பற்றி நேரில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதோடு, நிரூபிக்கப்படும் பட்சத்தில் இவர்கள் மீது அரசு கடுமையாகவே நடந்து கொள்ளும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தகுதியிருந்தும் இதுவரை நிவாரண உதவிகள் கிடைக்கப் பெருதவர்களின் மேன்முறையீடுகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதுடன், பல கிராம சேவகர்கள் கடுமையான விசாரணைகளுக்குட்படுத்தப்படலாம் எனவும் நம்பப்படுகின்றது.

# இந்திய தேர்தல் களம்

# சட்டமன்ற தேர்தலில் மாநில பிரச்சினைகள்

(டெல்லி)

இந்தியாவில் மக்களவைத் தேர்தலுடன் ஐந்து மாநிலங்களுக்கு சட்டசபைத் தேர்தலும் நடைபெற உள்ளதால், அந்தந்த மாநில பிரச்சினைகளே தேர்தல் பிரச்சாரத்தில் முக்கிய இடம் வகிக்கும் என்று யு. என். ஐ. செய்திகள் தெரிவிக்கின்றன. ஆந்திரா, சிக்கிம், கோவா, கர்நாடகா, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநில சட்டமன்றத் தேர்தலும் ஒரே நேரத்தில் நடைபெறவிருக்கின்றன.

## ஆந்திரப் பிரதேசம்

ஆந்திரப் பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் மாநில அரசு தோல்வியடைந்துவிட்டதாக, அங்கு பிரதான எதிர்க்கட்சியான இந்திரா காங்கிரஸ் குற்றம் சாட்டி வருகிறது. அத்தோடு நக்சல்பாரி இயக்கத்தின் தொந்தரவும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், அதனை ஒடுக்க ராமராவ் அரசு தவறிவிட்டது என்றும் இ. காங்கிரஸ் புகார் கூறுகிறது. ஊழல், பாரபட்சம் ஆகிய ராமராவ் ஆட்சிக்கு எதிராக பல்வேறு நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புக்களையும் கருத்துக்களையும் பயன்படுத்த காங்கிரஸ் திட்டமிட்டு வருகிறது.

இ. காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு பாரபட்சமாக நடந்துகொள்கிறது என்ற புகாரை தெலுங்கு தேசம் கட்சி முக்கியத்துவம் கொடுத்து பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தக் கூடும் இ. காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களில் முக்கிய வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை என்ற குற்றச் சாட்டையும் வலியுறுத்தும்.

## கர்நாடகம்

கர்நாடகத்தில் 1983க்கும் 1989க்கும் இடைப்பட்ட காலத்தில் இராமகிருஷ்ண ஹெக்டே முதலமைச்சராக இருந்துள்ளார். ஹெக்டேயின் ஆட்சிக்காலத்தை ஜனதா தள புகழ்ந்தும், இந்திரா காங்கிரஸ் குறைகளைக் கூறியும் தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தக்கூடும். ஜனதா தள் பிரச்சாரத் தலைவராக இராமகிருஷ்ண ஹெக்டே நியமிக்கப்பட்டுள்ளார்.

தாம் முதல்வராக இருந்த காலத்தில் செய்த சாதனைகளைக் கூறி மக்களிடம் வாக்குக் கேட்போம் என்று அவர் கூறியிருக்கிறுர். இந்திரா காங்கிரசில் மீண்டும் குண்டுராவ் சேர்ந்திருப்பதால் இத்தகைய பிரச்சாரம் முக்கியத்துவம் உடையதாக அமையும்.

## உத்தரப் பிரதேசம்

மற்ற மாநிலங்களை விட அதிகபட்சமான மக்களவைத் தொகுதிகளைக் கொண்ட மாநிலம். மொத்தம் 85 தொகுதிகளில் 83 தொகுதிகளை சென்ற தேர்தலில் இ. காங்கிரஸ் கைப்பற்றியது.

உத்தரப் பிரதேசத்தில் குற்றவாளிகளை அரசியலுக்குப் பயன்படுத்துவதும், அரசியலுக்கு குற்றவாளிகள் மாறுவது குறித்தும் பிரச்சாரம் தீவிரமாக அமையக் கூடும். சமீபத்தில் நடந்த இடைத் தேர்தலில் குற்றவாளிகளைப் பயன்படுத்தி வெற்றி பெற்றதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியிருக்கின்றன. ஆளுங்கட்சியும் எதிர்க் கட்சியும் ஒருவரையொருவர் வகுப்புவாதிகள் என்று புகார் கூறக் கூடும். ராஜஜென்ம பூமி விவகாரம் இதற்குப் பெரிதும் பயன்படும்.

அரசுப் பணிகளுக்கு புது நியமனங்கள் கூடாது என்று உத்தரப்பிரதேச அரசு ஒட்டு மொத்தமாக தடைவிதித்துள்ளது. இதனுல் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையை எதிர்க்கட்சிகள் தங்கள் பிரச்சாரத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடும்.

## கோவா

கோவாவிற்கு மாநில அந்தஸ்து தரப்பட்டு மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டது இம் மாநிலத்தில் முக்கியமான பிரச்சினைகள் எதுவுமின்றியே எதிர்க்கட்சிகள் சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்கின்றன என்றும் யூ. என். ஐ செய்திக் குறிப்பு கூறுகின்றது.

## உங்களைப் பாதுகாக்க

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வருவதற்காகத் தம்மாலான எல்லா வழிகளிலும் உழைக்க வேண்டும். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதுடன் மக்களையும் மண்ணையும் பாதுகாப்பதில் தம்மை முழுமனதாக அர்ப்பணிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். இவர்களை பிள்ளைகளாகவும், சகோதரர்களாகவும் கருதி ஒத்துழைப்பும் உற்சாகமும் கொடுப்பதன் மூலம் எமது மண்ணையும் மக்களையும் பாதுகாப்பதற்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்' என்று மேலும் குழுமியிருந்த மக்கள் மத்தியில் பேசும்போது திரு. ரவீந்திரன் குறிப்பிட்டார்.

இதன் பின்னர், இப்படையின் யாழ் மாவட்டக் கமாண்டரான முன்னுள் பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. ராஜன் மக்கள் பாதுகாப்புப் படைவீரர்களை அந்தந்தப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைப்பதில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டிருந்ததாக எமது நிருபர் தெரிவிக்கிருர்.

## பணம் கொடுத்தால்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இறந்தவர்களின் உறவினர்களிடம் இவ்வாறு பணம் கறந்து வருவதாக பாதிக்கப்பட்ட பலர் எம்மிடம் தெரிவித்தனர்.

வறுமையினுல் பீடிக்கப்பட்ட பல ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு பணம் கொடுக்க முடியாமல் பல மணிநேரம் தாமதிக்கவேண்டியுள்ளதாம்.

இப்படி ஏமாற்றிப் பணம் பறிக்கும் இக் குழுவினர் இதுவரை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்காமலிருப்பது ஆச்சரியத்தை அளிப்பதாக பாதிக்கப்பட்ட ஒருவர் எம்மிடம் தெரிவித்தார்.

# தேர்தல் நடைபெறுமுன்பே வெற்றிபெற்றுவிட்ட உறுப்பினர்கள்!

இந்தியாவில் 9வது பாராளுமன்றத்திற்கான முதலாவது உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார் ஜம்மு காஷ்மீர் சிறீநகர் தொகுதிக்கு மனுத் தாக்கல் செய்திருந்த முகமட் ஷபீ பட் என்பவரே போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராவார் வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்ளும் காலக்கெடு நேற்று பிற்பகலுடன் முடிவடைந்ததும், தேசிய மாநாட்டுக் கட்சியைச் சேர்ந்த முகமட் ஷபீ பட் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது.

கோவா சட்டசபைத் தேர்தலிலும் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் ஒருவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் கோவாவில் சட்டப் பேரவைக்கு போட்டியின்றி ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல் தடவை. திரு. நிஸ்ஸியோ பெலேரோ என்ற இந். காங்கிரஸ் வேட்பாளர் சட்டப் பேரவைக்கு 3வது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## மத்திய அமைச்சர்களின் மகன்களும் போட்டி

(ஹைதராபாத்)

மத்திய அமைச்சர்களான பி. வி. நரசிம்மராவ், வெங்களராவ், கே. சிவசங்கர் ஆகியோரின் புதல்வர்களும் ஆந்திர சட்டப் பேரவைக்காக இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிடுகின்றனர்.

## மக்களவைத் தேர்தலில் நடிகர் கிருஷ்ணு, நடிகை ஜமுனு

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேசத்திலிருந்து போட்டியிடும் இ. காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலில் திரைப்பட நடிகர் கிருஷ்ணு, நடிகை ஜமுனு, மத்திய அமைச்சர் வெங்களராவ் ஆகியோரின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

## புனர்நிர்மானக்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டச் செயலாளருமான திரு. ஆ. மகாலிங்கம், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும், மாகாணசபை உறுப்பினர்களையும் எதிர் வரும் 15ம் திகதி பி. ப. 2 மணிக்கு தமது காரியாலயத்துக்கு வருகை தருமாறு அழைத்துள்ளார். அத்துடன் தமது பிரிவின் புனர்நிர்மாண வேலைகளுக்கு ஒத்தாசை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், இல. 6, மகாத்மா காந்தி வீதி நவயுக வெளியீட்டு நிறுவனத்தாரால் மேற்படி முகவரியில் உள்ள விடுதலை அச்சகத்தில் அச்சிடப்பட்டு 3-11-1989ல் வெளியிடப்பட்டது.

தொலைபேசி 291

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org